19th March 1963]

திரு. முனு. ஆதி : இதே போன்று இன்னும் பரந்து கிடக்கின்ற இடங்களில் மற்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு மனு ஏதாவது வந்திருக்கிறதா? அரசாங்கத்திற்கு அதை உடனே கவனிக்கிற எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். இதே போன்று மற்ற கேள்விகளையும் கேட்டால் அதையும் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.

ஏரலில் கைதானோர் (திருநெல்வேலி மாவட்டம்)

*291 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலுகா ஏரலில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி மாலை நூற்றுக் கணக்கானோர் ஏரல் போலீஸாரால் கைது செய்யப்பட்டது உண்மையா?

(இ) அப்படியானால், காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) "No," Sir.

(*b*) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரெஸ்டு செய்யப்படாவிட்டாலும் கூட ஏறக்குறைய 140 பேர்கள் நியூஸன்ஸ் சார்ஜ் செய்யப்பட்டு, இரண்டு தினங்களுக்குப் பிறகு ஸ்ரீவைகுண்டம் கோர்ட்டில் 2 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்பட்டு, அதை அனுபவித்திருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நியூஸன்ஸ் மற்ற எத்தனையோ குற்றங்கள் செய்ததாக கருதப்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. என்ன புள்ளி விவரங்கள் வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் கோருகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சங்கராந்திக்கு முந்தின தினத்தன்று மாலையிலே பெஜாரில் இருந்தவர்களில் சாமான்கள் வாங்கு கையில் சத்தமாக இருந்தது என்ற காரணத்திற்காக 140 பேர்கள் அரஸ்டு செய்யப்பட்ட தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சங்கராந்திக்கு முந்தின நாள் 140 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் கனம் அங்கத்தினருக்கு எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை. 13—1—1963 தேதியன்று 2 பேர்கள் ஐ.பி.ஸி. 279 செக்ஷன்படி (driving or riding on a public way so rashly on negligently as to endanger human life). அல்ரஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். 15—1—1963 அன்று சார்ஜ் செய்ரிப்பட்டார்கள் இப்பொழுது கேஸ் நடக்கிறது.

[19th March 1963

திரு. சி. பொன்னுசாமி : சிறிய கிராமங்களாக இருப்பதினாலே அங்கெல்லாம் பிளாட்பாரம் வசதி கிடையாது. அதுவும் நல்ல நாளை முன்னிட்டு கிராம மக்கள் கூடி பொருள்களை வாங்கும் பொழுது, இது போன்று நடவடிக்கை எடுப்பது, அதாவது அரெஸ்டு செய்வது, நியூஸன்ஸ் சார்ஜ் செய்வது இனிமேலாவது அகற்றப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிறிய கிராமமாக இருந்தாலும் பண்டிகை நாளன்று ஒருவருக்கு மேல் ஒருவர் ஒட்டிக் கொண்டு சைகிளை அதிவேகமாக ஓட்டி, மற்றவர்களுக்கு இம்சை அளிப்பது என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல.

தற்கொலை செய்து கொண்டோர்

* 292 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் **1961-62-ல்** தற்கொலை செய்து **கொண்ட**வர்கள் எத்தனை பேர் ?

(இ) என்ன காரணத்திற்காக ?

(உ) இது முந்திய ஆண்டுகளைவிட அதிகமா அல்லது குறைவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 1961-ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை—3,164.

1962-ம் ஆண்டு (செப்டம்பர் மாதம் முடிய) தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை—2,516.

(இ) தற்கொலை செய்து கொண்டதற்கான காரணங்கள்:— வேலையின்மை பணத்தொல்லைகள், வறுமை, கடன்தொல்லை நீடித்தநோய், தீராதநோய், காதலில் தோல்வி, பரிட்சையில் தோல்வி, வீட்டுத் தொல்லைகள், நம்பிக்கை மோசம் ; சமூகத்தில் கெட்ட பெயர், இவை போன்றவை.

(உ) 1961-ல் நிகழ்ந்த தற்கொலைகள் 1959-ல் நிகழ்ந்தவற்றை விடக் குறைவு ; ஆனால் 1960-ல் நிகழ்ந்தவற்றைவிடச் சிறிது அதிகம். 1962-ல் நிகழ்ந்த தற்கொலைகளின் எண்ணிக்கை செப்டம்பர் மாத இறுதிவரையில்தான் கிடைத்துள்ளது. ஆகவே இதை முந்திய வருடங்களுக்கான எண்ணிக்கையுடன் ஒப்பிட முடியாது.

(*a*)—

Year.	*Number of suicides.*
1961	3,164
1962 (up to the end of September)	2,516

(*b*) Causes for committing suicides :—Unemployment, financial difficulties, poverty, indebtedness, protracted illness, incurable diseases, frustration in love affairs, failure in examination, domestic troubles, infidelity, social stigma and the like.